உ

கடவுள் துணை.

திருச்சி மதுரை தென்மேற்கு

கொள்ளிடங்காவே

வெள்ளவிபத்துச் சிந்

16 OCT 1924

இஃது

சூவனா - மாணிக்க நாயகரவர்களால்
இயற்றப்பட்டு,

சென்னை சூளை
பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1924. [அணா

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

சீக்கிரம் இரண்டாம்பாகம் வெளிவரும்.

3691
1924-11

0-,1MMN7,T
N24
L83478

முக்கிய அறிக்கை விருத்தம்.

அவனவன் தந்தைவிந்துக் கவனவன் பிறந்திருந்தால்
அவனியில் யெந்தனாலே யச்சிட மனதிலெண்ணான்
மூவரைக் சேர்ந்துபிள்ளை முண்டச்சி பெற்றிருந்தால்
ஆவலா யச்சிலிட்டு அழிநர கடைவார்தானே.

உ

கணபதி துணை.

வெள்ளவிபத்துச் சிந்து.

விநாயகர் துதி வெண்பா.

தென்னாடு மேற்கு திசைமுழுதுங் காவேரி
தன்னோடு கொள்ளிடமுந் தான்கலந்து—நன்னகரில்
வெள்ளத் திரளான விபத்துசிந் தைப்பாட
வள்ளல் கஜமுகநீ வா.

விருத்தம்.

உயிர்பிழைக்க மழைபொழிய ஒன்றுங்காணோம்
பயிர்செழிக்க ஏரிகுளம் நிரம்பக்காணோம்
துயருற இரத்தாக்ஷி வருடஞ்சேதி
நயங்கூற முதற்பொருளை நா[illegible]வோமே.

எண்சீர் ஆசிரியவிருத்தம்.

நாற்றிசையுங் கீர்த்திபுறும் தென்னிந் [illegible]வில்
நற்புகழாய் பெயர்வகித்த ரயில்வே பாகம்
சீர்ததும்ப சென்னைமுதல் சேது செல்லும்
சிறப்புபெறும் போட்மெயிலும் எக்ஸ்பிரஸ் வண்டி
காற்றடிக்க மழைபொழிய மகமேர் போல
கம்பிகளும் ரயில்பாலம் களமாய்ப்போன
[illegible] யனைவர்களு மறியவேண்டி
கூட்டி[illegible] பாட்டாயின் னாட்டில் நானே.

வெள்ளம்வந்த விந்தையைக் கேளும் என்ற மெட்

பல்லவி.

கொள்ளிடங்காவேரியார்மோசம்—குடிகள்நாசம் கொ

அநுபல்லவி.

வள்ளிமணவாளன்தந்தை கள்ளமனதோடுவிந்தை
வெள்ளந்திரளமுந்த அல்லல்படநேர்ந்ததிந்த கொ

சரணங்கள்.

கூற்றுவனுங்கோபங்கொண் டானே அல்லதுபிரம்மன்
சத்யங்கெட்டு சதிதான்செய் தானே சங்கரனுமை
புத்தின்வழிபா தாளஞ்சென் றாரோ மாலும்லட்சுமி
மத்யபாற்கடல் தனிலொளித் தாரோ
மற்றுந்தேவர்முனிவர்முதலாய்சற்றுங்கவலைவையாதாலே
இத்தரையிலிந்தவெள்ளம் பற்றியேதொடர்ந்தின்னுளே கொ

பத்தொன்பது பனிரெண் டிரண்டில் வருஷம்நன்று
பார்ஜுலையிருபத்தி யொன்று திங்கள்நாளன்று
மெத்தவுக்ரங்களைக் கொண்டு வருணன்சென்று
சித்தங்களிக்கவே வுண்டு
இத்தரையில்வாழும்நல்ல உத்தமர்களையும்கொல்ல
சத்தமிடிமின்னலில்லை சர்ஜ்ஜனரேகேளென்சொல்லை கொ

மேற்குமழைமுன் பொழிந்து வெள்ளமுமக
மேருபோல்வாரதைக் கண்டு ஜனங்கள்நின்று
பார்க்கபயங்கரங் கொண்டு பாலர்களன்று
பதைத்தவர்வேணபே ருண்டு
தீர்க்கமுடியாதுயரம் தேயத்தில்விளைந்ததையோ
தென்னமரம்காவேரியில் தெப்பமாடினதுபொய்யோ கொ

கன்னிகுலகேசு என்ற மெட்டு.

1 மத்தூர்ஸ்ரீரங்கப்பட்டணம் மைசூர்நஞ்சுண்டங்குடி
சுத்துகிராமங்களை சூழ்ந்ததுகாவேரிவெள்ளம்
காலன்வரும்வேளை கண்டவரார்முன்னாலே
2 சேலம்சத்யமங்கலம் சேர்ந்தயீரோடுபவானி
பாலமுடைப்பெடுத்து பாய்ந்தது அன்னசர்முழுதும் கா

	கொயம்பத்தூர்நீலகிரி	கொச்சிஎரணாகுளம்	
	கோபிசெட்டிபாளையமும்	கூட நடுங்கினதே	கா
4	பாலக்காடுஒலவக்கோடு	பழனிபல திசையில்	
	காலக்கோட மழையினாலே	கண்கலங்கி வாடினாராம்	கா
5	புல்லாச்சிஆனமலை	புங்கனூருகண்ணம்பாடி	
	கொல்லம் திருச்சூரு	கூடிஜனமோடுதுபார்	கா
	ஒஞ்சலூரெலமனூரு	ஒயில்லான திருவான்கூரு	
	பேய்ந்தமழையினாலே	பெருத்தவெள்ளமானதையோ	கா
	கொடிமுடிகடயம்பத்தி	குளித்தலைதலகப்பட்டி	
	அடியார்படுந்துயரை	யாரறிவாரன்னகரில்	கா
8	மதுரைதிருச்சிராஜ	மன்னார்குடிதஞ்சைநகர்	
	இதுவேகைலாசமென	எங்கிறாரன்னகர்முழுதும்	கா
9	கும்பகோணமாயவரம்	குற்றாலம்பாபநாசம்	
	அன்பர்படுமவஸ்தை	ஆண்டவன் தீர்ப்பாரங்குபோய்	கா
10	சீய்யாழிசிதம்பரம்	கொள்ளிடம்நீடாமங்கலம்	
	ஐயாமழையிதனா	லதிகபொருள்நஷ்டமென்றார்	கா
11	வைதீஸ்வரன்கோயில்	வளங்கிமான்பாப்பாகுடி	
	வரவுகுடிதுறையூரு	நிறையவெள்ளம்வந்ததென்றார்	கா
12	இத்தனைவூரேரிகுளம்	எங்குமுடைப்பெடுக்க	
	பக்தசிரோன்மணிகள்	பரதவிக்கலானதென்றார்	கா
13	கொள்ளிடங்காவேரிவைகை	கூட பெரியார்நொய்யலார்	
	வெள்ளந்திரண்டதனால்	வேணவிடுநஷ்டமென்றார்	கா
14	ஆற்றோரம்வாழ்ந்திருந்த	அன்பர்களின்விடு அந்த	
	கூற்றன்கொடுமையினால்	குடிகள்பாழானதென்றார்	கா
15	தென்மேற்குதேசமதில்	திகைத்தோடும்வண்டிகளை	
	கண்காணகஷ்டமென்றார்	கம்பிபாலம்கட்டும்வரை	கா
16	தந்திதபால்பார்சல்களும்	தென்மேற்குபோவதில்லை	
	இந்தியாநேயரிதா	லேகமனகஷ்டப்பட்டார்	கா
17	முப்பத்துமூன்றுஅடி	மோதிவெள்ளம்புரள	
	செப்பமுடியாரதம்	தெப்பமாடிபோனதென்றார்	கா
18	எந்தன்பதிப்பைகொண்டு	இனிவேறுஅச்சாபீஸில்	
	சொந்தமாபச்சிலிட்டால்	சதணுகுவானெனக்கு	கா

மஹமதியர்குலத்தில் மாணிக்கமாய் விளங்கும் என்ற வர்ணமெட்டு.

1 ஈசாயெந்தனையாள்சர் வேசாநீதுணையாசன்
பேசாதிருப்ப தேனையா பிரியவுப
வாசாநின்சிஷ ஞனையா
தேசநாசமும் விசேஷமானதென
நேசரேசுரா ரீஸன்மோசமென
நின்பதந்தந்தாளு மையா நற்கிதம்பாட
அன்பாய்வந்தாண்டிடு மெய்யா

2 ஆற்காடுராணிபேட்டை அம்மூர்ஆரணிநாட்டில்
அதிகவெய்யலுங் காயுதே மழைபொழியா
திடரால்பயிர்கள் தீயுதே
அத்திமுகவனை பெற்றசிவனேநீ
நத்தியுலகினில் நித்தமும்பொழிய
உத்திரவளி யீசனே உத்தமகுண
சத்திசுயம்ப்ர காசனே

3 வேலூர்விரிஞ்சிபுரம் கோலார்துரிஞ்சிவரம்
வாணியம்பாடி நகரம் மேல்பட்டியாம்பூர்
கா.ணில்மிகவும் பகரம்
வேதமோதிடு மரூதிகோபுரமும்
சோதரர்கள்வாழ் வீடுநால்புறமும்
சொல்லநாவது வல்லையே குடிக்கஜலம்
எல்லைமுழுது மில்லையே

4 சேலம்டவுன்கிழக்கே சென்னைநகர்க்குதெற்கே
சிதம்பரமழை யில்லையே செய்யார்பாலாரில்
சரியாய்ஜலமும் வல்லையே
சேயரிட்டபயிர் காயநஷ்டமுனம்
நேயர்பட்டதுமு பாயகஷ்டமனம்
செப்புவதைகேள் தொல்லையே செல்வர்கள்துயர்
சேர்த்தெழுதிட மில்லையே

5 மழையோமழையோவென்று மானம்பார்த்தார்கள்நின்று
மானிலத்தேவா முன்பர்கள் மஹாவுத்தம
ஞானித்தேவர்நம் நன்பர்கள்
மாதர்மக்களும் சேதமிக்கவாம்
நீதேன் துக்கமே ஓதத்தக்கதாம்
மதுரைதென்மேற்கு வடக்கு மாணிக்கம்சொன்னேன்
மழையால்வந்ததோ ரிடக்கு

கும்மி.

தொந்திகணேசாநின் வல்லப்பைபாதம் தொழுதேன் துணை யாய் ஜகமதிலே, முந்திகும்மிபாட மூஷிகாநீயென்முன் வந்துவரந் தரவேணுமென்றேன். 1

கட்டினவீடெங்கும் பாழாச்சு-சிலர் சாவத்தைநொந்து அழ லாச்சு, பட்டினிகிடந்து வூர்முழுதும்ஜனம் பாதைபடுவதையென்ன சொல்வேன். 2

வீடுகள் விழுந்துசிதைந்தார்கள்-சிலர் வேதனைபட்டுயிறந்தார் கள், காடுமேடெங்கும் பிணங்களின்நாற்றமே கண்டதாய்சொல் தனூர் நேசர்களே. 3

நாக்கைக்கடித்து சிலரிறந்தாரங்கே நாடியேசேத்தில் புதைந் திருந்தார், பாக்கபயமாய் மடிந்திறந்தார்சிலர் பாதைபட்டங்கு பிழைத்திருந்தார். 4

அண்ணனைகாணோமென் றேயழுவார்-சிலர் ஆச்சியும்போனா ளென்றேவிழுவார், பெண்ணையுங்காணோமென் றேயழுவார் சிலர் பிள்ளைபிரந்தானென் றேதொழுவார். 5

தந்தையிரந்தாரென் றேயழுவார் சிலர் தாரமடிந்ததென்றேவிழு வார், மந்தையாடுகாணோ மென்றழுவார் சிலர் மாயனேகாரு மென் றேதொழுவார். 6

பார்த்தவர்கேட்டவர் தானழுவார் சிலர் பாதைபட்டே கண் ணீல் நீர்விடுவார், சூஸ்திரமாகவே யெண்ணற்ற ஜனங்கள் நாஸ்தி யானதாய்சொல்நேசர்களே. 7

வாழைமரங்களை தெப்பமாகக்கட்டி வந்துஜனத்தைபடகேற்றி ஏழையெளியோர்க்கு அன்னமிடவெகு ஏற்பாடுசெய்குனூர் நேசர் களே. 8

நேயர்கட்கின்று வுதவிபுரியுமோர் நன்னடக்கையுள்ள புண்ணி யர்க்கு, மாயனவர்பதம் பெற்றுவுலகினில் மாகூஷிமையாயர சாகூஷி செய்வார். 9

பாட்டையுங்கண்டுபிறட்டாதீர் பெரும் பாவலர்பேழையெடுக் காதீர், யேட்டையும்வீணாய்கெடுக்காதீர் நல்ல யோக்கியரச்சி லடிக் காதீர். 10

ரென்றுசிலர்சேர்த்துக்கொண்டார் நூற்றைம
வழக்கெடுத்து கூறினார் துரையின்முன்னே
பிடிப்பவர்கள் செய்துவரும்மோசமதை
லெழுதயிடம் யில்லையிதனைக்கண்ணுற்றீ

பிடித்தவர் 20 - வது வாரம் மீதிதொகையை பங்கிட்டுத்
ல ஒட்டம்பிடித்ததால் சிட்டுகட்டின 80-பேர் புலம்புதல்.

பஹாரியாலா தேக்கோ ஆயிச்சேபன்மே
என்றவர்ணமெட்டு.

பல்லவி.

சொன்னாலே ரோஷம் வரு
பண்ணுரே மோசம்

கண்ணிகள்.

1 அன்னாளேயெனக்குரைத்தா ராசைவிடவல்லையே
ஆகையாலதுமுதல்யான் பட்டதொல்லையே
சொல்ல நேரமில்லையே

2 நல்லவுணவுவுண்ணாமல் நாளும்பணஞ்சேர்த்துயென்
பிள்ளைகுட்டிகளையே கண்ணிப்பார்த்துயான் சொ
கள்ளருக்கு தோர்த்துநான்

3 ஆப்பம்வடைஇட்டலிவிற் றுவலாய்சேர்த்தப்பணம்
காப்படிக்கவைத்தது கரைந்ததேசுக்ஷணம் சொ
திகிலாச்சே டினம்

4 சாதங்கூடைநீதந்தூக்கி சம்பாதித்தகாசைவீண்
சண்டாளருங்கொண்டாட்டமாய் கொண்டேகினரென் விதி சொ
யென்றுப் போரேன்

5 சாணந்தட்டிவிற்று சம்பாதித்தபணம்போச்சுதே
வீணர்பேச்சைகேட்டதாலிவ் விதிவாய்ச்சுதே சொ
துக்கம் மேலாச்சுதே

6 எந்தவிதச்சிட்டிலும் யினிசேரவேமாட்டேனே
சுந்தரேசன்சாக்ஷியான் சொல்லிவிட்டேனே சொ
அதால் மிகக்கெட்டேனே

7 சிறுமணவூர்சிடன் குனா மாணிக்கஞ்சொல்வாக்கியம்
செவியில்கேட்டதுபோல் நடவரும்பாக்கியம் சொ
கவிமிக இலக்ஷ்யம்

ஒயிற்கும்மி.

எத்தனைநாளைக் கிருப்பி னுமோர்நா
ளிறப்பதற்கைய மில்லையதனால்
இனியாகிலுந் துணிவாய்மனங் கனிவாய்சிரம் ப
என்றும்புரிவோர்க் கின்பமதனால்

2 இரணியன்ராவணன் கும்பகர்ணன்மற்றும்
ஈரேழுலகாண்ட சூரபத்மன்
எல்லோர்களும் பொல்லாங்குண முள்ளோர்மிக நல்லே
இம்சைபடுத்தி யழித்தனர்முன்

3 இன்னுமெத்தனையோ துஷ்டருலகினில்
எந்தனுக்குநிக ரில்லையென்று
இருமாப்படைந் தமரேசெய திருமால்சிவ பெருமான்சரம்
ஏவவிடுத்தன ராவியன்று

ஆதலினாலிந்த பூதலமேல்வைத்த
ஆசையைநீக்கி யனுதினமும்
அரனார்குரு பரனாரைக் கரனாரிவ ரருளாலினி
அன்புடன்தர்மம் புரிந்திடுவீர்

சுந்தரேசன்செய்த இந்தக்கவிதனில்
வந்தப்பிழைதள்ளி சந்ததமும்
சுகமாகவே [illegible]மாமதில் பகவானடி மிகவேதொழும்
சுத்தசன்மார்க்க தனைமையடைவீர்.

பவுன்சீட்டு பரிதாபப்பாட்டு
முற்றுப் பெற்றது.

மலையாள மனோரஞ்சித கூந்தல் வளரும் எண்ணெ

ந்த "தேவகி" கூந்தல் வளரும் எமது தை
மானது அனேக திவ்விய வனமூலிகைகளாற் ச
திரமுறைப் பிரகாரம் தயார் செய்யப்பட்டது.
னது பரிமளம் அன்று மலர்ந்த புஷ்பங்களின் வ
னைக்கு நிகராகயிருக்கும் கூந்தலை நீளமாக வள
செய்யும். மூளையின் கொதிப்பைத் தணித்து க
களுக்கு குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள ப
நோய்களையும் நிவர்த்தி செய்யும்.

5-பலம் தைலம் அடங்கிய டின் 1-க்கு
விலை ரூபா 1 0 0

சுகானந்தம் அண்டு கம்பெனி,
சூளை போஸ்டு, மதரா